Ragistered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 17    (30 05 - 1992)    சனிக்கிழமை    ஓசை: 102

## 2000 அடையாள அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் இரண்டாயிரம் பேருடைய அடையாள அட்டைகள் யாழ் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன. கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியைப்பெற்று யாழ். அரசாங்க அதிபர் மேற்படி அடையாள அட்டைகளையும் 5000 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும் தம்முடன் எடுத்து வந்துள்ளார். மேற்படி அடையாள அட்டைகள் அனைத்தும் நேற்றையதினமே செயலகத்தில் வைத்துத் தரம் பிரிக்கப்பட்டு உரிய உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் புதன்கிழமைமுதல் இவை உதவிஅரசாங்க அதிபர்களால்உரியகிராம (4-ம்பக்.பார்க்க)

# வாகனேரியில் புலிகள் துணிகர தாக்குதல்

# 27 இராணுவத்தினர் பலி: பலர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகனேரிப் பகுதியில் விடுதலைப் புலி வீரர்கள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 6 பேர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது. வாகனேரியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும கடும் சண்டை மூண்டுள்ளதாக அறிவித்த சிறிலங்கா வானொலி 23 படையினர் புலிகளால் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதம்செய்தது.

நேற்று அதிகாலை இத்துணிகரத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடாத்தியதாக தெரிய வருகின்றது. வாகனேரி மியான் குளம் சந்தியில் இத்தாக்குதல் இடம்பெற்றது. ரோந்துவந்த சிறிலங்கா இராணுவ அணியை மூன்று முனைகளில் இருந்து வழிமடக்கித் தாக்கியதாக மேலும் தெரிய வருகின்றது.

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு பலத்த பாதுகாப்பு

### வவுனியாவில் படை குவிப்பு

(வவுனியா)

சிறிலங்கா ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவின் வவுனியா விஜயத்தை ஒட்டி கடந்த சில நாட்களாகவே வவுனியா நகரம் எங்கும் முப்படைகளின் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வவுனியா முதல் மதவாச்சி வரையுள்ள பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் மட்டும் சில மீற்றர்களுக்கு ஒரு படை வீதம் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிசாரும்; இராணுவத்தினரும் பாதுகாப்புக்கருதி நிறுத்தப்பட்டுள்ளதாக அங்கி (4 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பகுதியில் பிடிபட்ட

## பொதுமக்கள் வாகனங்கள் இராணுவப் பாவனையில்

(பூநகரி)

பூநகரிப் பகுதியைச் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த வருடம் சுற்றிவளைத்த போது பல யாழ். வர்த்தகர்களுடைய லொறிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இராணுவப் பிடிக்குள் சிக்கின. இவற்றை மீட்க மேற்படி வர்த்தகர்களும் தனியாரும் தனிப்பட்ட முறையிலும் தமக்கென ஓர் சங்கத்தை ஆரம்பித்து அதன் மூலம் அரசாங்க அதிபருடனும் பல தடவைகள் முயற்சிகளை மேற் கொள்ளப் பட்டதும் தெரிந்ததே.

தற்போது கூட்டுப்படைத் தலைமையகம் யாழ் அரசாங்க அதிபரிடம் தம்மிடம் 200ற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும் லொறிகளும் இருப்பதாக கூறியுள்ளனர். இவற்றில் சில லொறிகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் இன்னும் சில தம்மால் பயன்படுத்தப் படுவதாகவும் தெரிவித்துள்ளனர்

இவ்வாறு தம்மால் பயன் படுத்தப்படுவதாக இராணுவத்தினர் அறிவித்துள்ள லொறிகளின் இலக்கங்களில் சில பின்வருமாறு ஏனைய சில

[4 ஆம் பக்கம் பார்க்க]

வீரச்சாவு

வீரவேங்கை

உதயன்



முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் வெளியேறிவந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலில் வீரவேங்கை உதயன் (அன்ரன் மரியதாஸ் பாலகிருஷ்ணா. துர்க்கா வீதி 4 ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு) என்னும் போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## 2 கவச வாகனங்கள் வளலாயில் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன் தினம் வெளியேறிவந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலில் இரண்டு கவசவாகனங்கள்முற்றாக அழிக்கப்பட்டன. புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது இராணுவத்தினர் இழப்புக்களுடன் பின்வாங்கி ஓடிவிட்டனர்.

நேற்று முன்தினம்அதிகாலை 5 30 மணியளவில் பலாலி முகாமிலிருந்து இராணுவத்தினர் அச்சுவேலி பத்தமேனி ஊடாகவும், தொண்டமனாறு கடற்கரை ஊடாகவும் வளலாய், கதிரிப்பாய் பகுதிகளுக்கு முன்னேறிவந்தனர் இவர்களுக்கு உதவியாக வான், கடற்படைத் தாக்குதல்களும், எறிகணைத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன

இவர்களைத் தொண்டமனாறு பகுதியிலும், வளலாய், கதிரிப்பாய் பகுதிகளிலும் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர். இச் சண்டை மாலை 4 மணிவரை தொடர்ந்தது.

மாலை 4 மணியளவில் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கமுடியாது இராணுவத்தினர் பின்வாங்கி அவர்களின் அரண்களை நோக்கி ஓடிவிட்டனர்.

இரண்டு இராணுவக் கவச வாகனங்கள் கண்ணிவெடிகளில் சிக்கி நாசமாகின இத்தாக்குதல்களின் போதுபத்துக்கும் மேற்பட்ட இராணுவத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 9 வேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் தொண்டமனாறு நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலில் ஒன்பது வீரவேங்கைகள் வீரச் சாவைத் தழுவிக் கொண்டனர்.

லெப். இசைவாணன் (வசந்தன் - இராசசிங்கம் கணேச... சாலை சாவகச்சேரி), வீரவேங்கை வீரச் செல்வன்(வதனன் - சின்னப்பு ஜேசப் எடிசன், கரந்தன் மேற்கு. நீர்வேலி), வீரவேங்கை ஆவுடையான் (ஆனந்தன்-சிவகுரு குகனேந்திரன் நவாலி தெற்கு மணிப்பாய்), வீரவேங்கை துரோணன் (கோகுலசிங்கம் லோகேஸ்வரன். தம்பலகமம் திருமலை). வீரவேங்கை சிவகுமாரன் (சர்வானந்தம்

## ஒய்வூதிய வவுச்சர்

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் அடுத்த வாரம் இங்கு வந்து சேரும் என யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் இங்குவந்து சேரும் என எதிர்பார்க்கப் படும் குமண கப்பலில் இந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

தற்போது கூட்டுப்படைத் ... [4 ஆம் பக்கம் பார்க்க] ... கின்றனர். ... லாய், கதிரியாய் பகுதிகளு ... இரண்டு இராணுவக் கவச

★ இரு கவச வாகனங்கள் அழிப்பு; ★ படையினருக்குப் பேரழிவு

# முல்லையில் புலிகள் - ராணுவம் 2-வது நாளாக உக்கிர மோதல்

## விமானங்கள் அகோரக் குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் வெளியேறி வந்து சிலாவத்தையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் இடையில் நேற்றுப் பகல் மீண்டும் உக்கிர மோதல் இடம்பெற்றது.

இம் மோதலின்போது விடுதலைப் புலிகளின் ஆர் பி ஜி எறிகணைத் தாக்குதல்களுக்கு இரண்டு இராணுவ வாகனங்கள் சேதமாகின.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு இராணுவத்தினர் அலம்பில் பக்கமாக முன்னேறி சிலாவத்தையில் நிலைகொண்டிருந்தமை தெரிந்ததே.

இந்த இராணுவத்தினர் நேற்று பகல் அந்த இடத்திலிருந்து மேலும் முன்னேற முயன்றனர். இவர்களுக்கு உதவியாக வை- 12, அவ்ரோ, இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், 2 உலங்குவானூர்திகள் என்பன கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடாத்தின. முகாமிலிருந்து எறிகணை வீச்சும் நடாத்தப்பட்டன.

இம் முன்னேறும் முயற்சிகளிற்கு ரி-55 ரக டாங்கிகள் உட்பட பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படையினரின் உதவியும் இம் முன்னேறும் நடவடிக்கையின் போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த இராணுவ அணியை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லை மோதலில் 4 புலிகள் வீரச்சாவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்ற உக்கிரமோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். மறவன் (ரஞ்சித்) பரமசிங்கம் - தவபாலன் [சுற்சிலைமடு, ஒட்டிசுட்டான] 2 ஆம் லெப் நந்தன் [கைலிங்கம், சுதர்சன் - நெடுங்கேணி, முல்லைத்தீவு] 2 ஆம் லெப். நாயகன் [கபில்] கதிரமலை சேதீஸ்வரன் [துன்னாலை தெற்கு கரவெட்டி] 2 ஆம் லெப் பாணன் [ரவிச்சந்திரன்] நடேசலிங்கம் உதயமோகன் [புளியடி ஒழுங்கை, காங்கேசன்துறை] ஆகியோர் வீரச்சாவடைந்தனர் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இந் நான்கு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பலாலியில் காவலிலுள்ள மேலும் சிலரது விபரம்

(நமது நிருபர்)

யாழ். கடற்பரப்பில் சிறிலங்கா கடற் படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில தடுத்துவைக்கப்பட்டுள்ள சில இளைஞர்களது பெயர் விபரங்கள் ஏற்கெனவே வெளியாகியது தெரிந்ததே. அப் பட்டியலில் பெயர் விபரம் தெளிவின்மையால் சிலரது பெயர்கள் அதில் வெளியிடப்படவில்லை. அவர்களது பெயர் விபரங்களை நேற்று யாழ் அரசாங்க அதிபர் வெளியிட்டுள்ளார். அவர்களது பெயர் விபரங்கள் வருமாறு:

இராமன் இராசம் (5 ஆம் வட்டாரம், நயினா தீவு) விசுவலிங்கம் அருணாசலம் [திருநகர், யாழ்ப்பாணம்], விக்ரர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உடனடியாக இரத்தம்தேவை

''யாழ் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு மிகவும் அவசரமாக ஓ பொசிட்டிவ், பி நெகடிவ் இன இரத்தம் தேவைப் படுகிறது. தயவு செய்து இந் நோயாளிகளைக்காப்பாற்றும் முகமாக உடனடியாக இரத்த தானம்செய்யுமாறு நோயாளர் நலன் புரிச் சங்கம் பொது மக்களைக் கேட்டுக் கொள்கின்றது''

## தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு முடிவில் மாற்றமில்லை

### சு. க. அறிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பது என்ற தனது முடிவில் மாற்றம் எதுவும் இல்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அறிவித்துள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

லெப். இசைவாணன் (வசந்தன் - இராசசிங்கம் கணேசதாஸ், துன்னாலை தெற்கு கரவெட்டி). வீரவேங்கைதங்கப்பன் (சேதீஸ் - பொன்னையாதிருலோகநாதன் சரதிருமலை). வீரவேங்கை சிவகுமாரன் (சர்வானந்தம் ஜெயானந்தம், வலாய்), வீரவேங்கை பவளன் (மகேந்திரராசா நந்தகுமார் கரையூர் தொண்டமனாறு). வீரவேங்கை விவேகன் (பாலிக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வாகரைப் பகுதிக்கு உணவு கொண்டுசெல்ல இராணுவம்தொடர்ந்துதடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பகுதிக்குச் சமூக சேவை நிறுவனம் ஒன்று உலர் உணவுப பொதிகளைக் கொண்டுசென்ற போது சிறிலங்கா இராணுவத்தினர் அதனைத் தடுத்துவிட்டனர்.

கடந்த ஆறாம் திகதிமுதல் வாகரைப் பகுதிக்கு எந்தப் பொருள்களையும் கொண்டு செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்துள்ளமை தெரிந்ததே.

## இடம் பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் வடமராட்சி மற்றும் அச்சுவேலிப் பகுதிகளில இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளோருக்கு சமைத்த உணவுகளை வழங்குவதென யாழ் மாவட்ட அரச சார்பற்றநிறுவனங்களின் இணையம் நடாத்திய விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

அடுத்த ஒரு வாரத்திற்கு தேவையான நிவாரணத்தை யாழ் செயலகம் வழங்கும் என யாழ் அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மேற்படி இடம் பெயர்ந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்

கோபபாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளுக்கு 55 இலட்ச ரூபா நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது

கடந்தஇரண்டுவருடங்களின் முன் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் கடும் மழை, காற்று, சூறாவளியால் பல விவசாயிகளது வாழை, தென்னை மரங்கள் அழிவுற்றது தெரிந்ததே. இவற்றால் ஏற்பட்ட இழப்பிற்கு நஷ்டஈடு வழங்கக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வைத்தியக் கலாநிதி; அமரர்

# ஜே. பி. சி. பிலிப்ஸ் ஓராண்டு நினைவுமலர்

31-05-92

பிறந்த நாட்டிற்கும், குறிப்பாகப் பிறந்த ஊரான குருநகருக்கும், மக்களுக்கும் பணிகள் பல ஆற்றி மங்காப் புகழ் பூத்து அமரத்துவம் எய்திய பெரியார் வைத்தியக் கலாநிதி ஜே. பி. சி பிலிப்ஸ் அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லா விட்டாலும்' அன்னார் நாட்டுக்கும், மக்களுக்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளின் மூலம் மக்களின் உள்ளங்களில் நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

## கல்வி, சமய, சமூக பணிகள்

அமரர் ஜே. பி. சி, பிலிப்ஸ் அவர்கள் தனது இளம்பராயத்தில் 1948 ஆம் வருடமளவில் 10 வயது நிரம்பிய சிறுவர் குழுவொன்றினை 'புனிதவளன்' விளையாட்டுக் கழகம் என்ற பெயருடன் வழிநடாத்தி, இச்சிறுவர்களுக்குச் சமய, கல்வி, விளையாட்டுத் துறைகளில் ஊக்கமளித்தார். இன்று இக்கழகம் 44 ஆண்டுகளை நிறைவெய்தி பலவேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளதென்றால் பெரியார் அவர்களின் உறுதியான சமூகப் பணிக்கு இதுவே எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இக்கழகத்தை வழிநடாத்தியதுடன் ஆரம்பமாகிய அன்னாரின் தூய சமூகப் பணி காலப்போக்கில் விரிவடைந்தது. யாழ். குடாநாட்டின் சமயத் துறைக்கு-யாழ் மறைமாவட்டத்தின் உறுதியான தூணாகவும், கல்வித் துறைக்கு - புனித பத்திரிசியார் பழைய மாணவர் சங்கத்துக்குத் தலைமை வகித்தும், வட இலங்கை வைத்தியக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் துணையாகவும், விளையாட்டுத் துறைக்கு- புனிதவளன் வி. க. சார்பாக 'யாழ். உதைபந்தாட்ட லீக்' கிற்குத் தலைமை வகித்தும், கலைத் துறைக்கு - குருநகர் நடன நல்லிசைக் கலா மன்றத்துடன் இணைந்து பணியாற்றியும், தொழில் நுட்பத் துறையில் - பத்திரிசியன் தொழில் நுட்ப நிறுவனத்தின் தலைவராகவும் இணைந்து பணியாற்றினார்.

## யாழ். விளையாட்டுத்துறையின் பொற்காலம்

குறிப்பாக வைத்திய கலாநிதி ஜே பி. சி பிலிப்ஸ் அவர்கள் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் காலடி எடுத்து வைத்த 1977 ஆம் ஆண்டு முதல் ஓர் பொற்காலம் என்றே கூறலாம். இக்காலப் பகுதியில் லீக் மனையென வளர்ச்சி கண்டமை யாவராலும் அறியப்...

உதைபந்தாட்டக் குழுக்கள் யாழ் நகர் வந்து போட்டிகளில் கலந்து கொண்டன. அதேபோல் யாழ். நகர் குழு. வெளிமாவட்டப் போட்டிகளில் கலந்து கொண்டதும்' குறிப்பாக இந்தியா சென்று அங்கு பல போட்டிகளில் வெற்றியீட்டியதும் குறிப்பிடத்தக்கன.

தூய்மையும், கடமையுணர்வும நிறைந்த தனது வைத்திய சேவையையும், நிறைவாகவும், கடமையுணர்வுடனும், ஏழை - செல்வந்தர் என்ற பாகுபாடுகளின்றித் தனக்கேயுரித்தான வைத்தியப்பண்புகளுடன்உயிர் காக்கும் கடமைகளையும் வாழ்நாளில்ர்அமைதியாகச் செய்து முடித்தா.

எத்துறையில் கலாநிதி ஜே பி. சி பிலிப்ஸ் அவர்கள் ஈடுபட்டாலும் அத்துறை சிறப்புடன் வளர்ச்சி கண்டு, நீதியான நிர்வாகக் கட்டமைப்பாக உருமாறியதை அவதானிக்கலாம். பெரியார் அவர்கள் வாழ்ந்து சமூகப் பணியாற்றிய அரை நூற்றாண்டு காலத்தில் யாழ். நகரில் இவர் போன்ற ஓர் தூய அப்பழுக்கற்ற சேவையாளனைக் கண்டதில்லையென்றே கூறும் அளவிற்கு அவரது பணிகள் மூலம் துலங்கினார்.

## அறங்காவற்சபை வேண்டும்

நிலையான பல பணிகள் புரிந்த வைத்தியக் கலாநிதி ஜே பி சி. பிலிப்ஸ் அவர்களுக்கு, அவர் பணியாற்றிய ...

ஒன்றிணைந்து அவர் பெயரல, இந்நாட்டில் நிலை நாட்டா ''அறங்காவற் சபை'' ஒன்றினை நிறுவி. அதன் மூலம் அன்னார் சமூகத்துக்காற்றிய பணிகளை வெளிக் கொணர்வதும், தொடர்வதும் நாம் அவருக்குச் செலுத்தும் புனிதமான அஞ்சலியாக அமைவுபெறும்.

அ. யேசுதாஸன்
செயலாளர், புனிதவளன் விளையாட்டுக் கழகம்.



## புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் செய்தி

அமரர் வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஜீவநாடியாக செயல்பட்டவர். அன்னாரின் மறைவு எமக்கு இட்டு நிரப்பமுடியாத பெரும் இழப்பாகும். இந்த இழப்பு எமக்கு மட்டும் உரியதல்ல. ஏனைய பல அமைப்புக்களும் அவரின் எதிர் பாராத மறைவினால் பாதிப்படைந்துள்ளன என்ற நினைவும் இத்துன்பத்தை தாங்கிக்கொள்ள வேண்டியவர்களாக நாம் தனித்து விடப்படவில்லை என்பதும் துன்பத்தின் மத்தியிலும் ஓர் ஆறுதல் தரும் தன்மையுடையதாக உணர்கிறோம்.

அவரது பரந்துபட்ட சேவை பல அமைப்புக்களை மனிதநேய செயற்பாடுகளில் ஊக்கமுடன் செயல்பட வைத்துள்ளது. இளைஞர் முன்னேற்றம் அவரது பற்றிய விடயங்களுக்கு அவர் எப்போதும் முன்னுரிமை வழங்கி செயல்பட்டார். அவரது சேவையின் பலன்களை அடைந்த சமூகம் அன்னாருக்கு தங்கள் மனம் நிறைந்த அஞ்சலியை காணிக்கையாக சமர்ப்பிக்கிறது. அவரது சிறப்பியல்புகளை நினைவு கூருகிறோம். பொதுசேவைகளில் பல முனைப்புகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அவர் எந்த அமைப்பிலும் பதவிக்காக போட்டியிட்டவர் அல்ல. அப்படியான நிலைமை உருவாகும் சந்தர்ப்பங்களில் எவரோடும் மோதும் நிலையைத் தவிர்த்து எவருடனும் இணைந்து செயல்பட சித்தமாகவிருக்கும் தனது தன்மையை வெளிப்படுத்தி தனது எதிர்ப்பாளர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் சிறந்த பண்பு அவரிடம் நிறைவாக இருந்தது.

அமரர் பிலிப்ஸ் இன்று உயிருடன் இருந்திருந்தால் விடுதலைக்கான வேள்வியில் அவிந்து கொண்டிருக்கும் இன்றைய சமூகத்தின் சேவையில் ஓர் உதாரண சக்தியாக இடம்பெற்றிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

மக்களின் மனங்களில் நிறைந்த ஒரு பொதுசேவையாளனாக அமரர் வைத்தியக் கலாநிதி ஜே பி. சி பிலிப்ஸ் அவர்களை கௌரவித்து மலர் வெளியிடும் ஈழநாதம் ஸ்தாபனத்தாருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் மறைவின் ஒரு வருடம் நிறைவுபெறும் இந்நாளில் மக்கள் மனங்களில் அமரர் நீங்காத நினைவாக இடம்பெற வேண்டுமென்பதோடு அன்னாரின் மறைவின் பேரிழப்பை தாங்கிக்கொள்ளமுடியாமல் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கிறோம்.

59, புனித பத்திரிசியார்வீதி,
யாழ்ப்பாணம்.

ஜி. ஆர். இராசசிங்கம்
கௌரவபொதுசெயலாளர்

மலை எனப் புகழ் பூத்துச் சேவையின் செம்மலாக வாழ்ந்த கலாநிதியவர்களை இழந்து நிற்கும் அவரது மனைவி, பிள்ளைகள், அவரது தாய்க்குத் தாயான சகோதரி, மருமக்கள், அவர் அன்புடன் நசித்த தொழிலாளர்') பொதுமக்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புனிதவளன் வி. கழகத்தை 1948 இல் நிறுவித் தமது சமூகப் பணியை ஆரம்பித்த இப்பெரியாரின் சமூகப் பணியின் பொன் விழாவைச் சிறப்பிப்பதும் நமது தலையாய கடமையாகும்.

## ஒல்லாந்திலிருந்து ஒரு கடிதம

டாக்டர் ஜே. பி. சி பிலிப்ஸ் அவர்களின் மறைவை முன்னிட்டு மிகுந்த மனவருத்தம் அடைகிறோம். இளைஞர்களின் முன்னேற்றப் பாதையில் பலவகையிலும் குறிப்பாக யாழ் வாலிபர்களின் அபிவிருத்திக்காக முழுமையாக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தாரென்பதைநாமறிவோம்.

அவருடைய குடும்பத்தினருக்கும். உறவினர், சிநேகிதர்களுக்கும் எமது அநுதாபத்தை தெரிவித்து அவருக்காக நாங்கள் செபிக்கின்றோம்.

செபேமோ நிறுவனம்
ஒல்லாந்து.

(மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு எம். ஈ. பயஸ் அடிகளார் ஊடாக இக்கடிதம் வைத்தியக்கலாநிதி குடும்பத்தாருக்கு அனுப்பி ...


## மலரை மகரித்தித்தவர்கள்

★ **பி.ஐ. பர்னான்டோ**
542, ஆஸ்பத்திரி வீதி
( யாழ்-மருத்துவமனை முன்பாக )
247, பிரதான வீதி
( பிலிப்ஸ்வார்ட்முன்பாக )
யாழ்ப்பாணம்

★ **வனிக்கா மெடிக்கல்ஸ்**
274/2, ஆஸ்பத்திரிவீதி
( யாழ்-மருத்துவமனை முன் ஒழுங்கை )
யாழ்ப்பாணம்

★ **யாழ்-மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கங்களின் சமாசம்**
9, சின்னக்கடை வடக்கு வீதி, யாழ்ப்பாணம்

★ **றேடியோமனுவல்**
வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி
உதிரிப்பாக விற்பனையாளரும், திருத்துபவரும்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

★ **பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்**
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்

**புனிதவளன் விளையாட்டுக் கழகம்**
புதுமை மாதா கிழக்கு வீதி
குருநகர் யாழ்ப்பாணம்

★ **பரணி மருந்துச்சாலை**
456, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

★ **சிற்றி மெடிக்கல்ஸ்**
487, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

★ **ஹரன் ஜுவல்லர்ஸ்**
50, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்

★ **மொறாயஸ்**
50, மணிக்கூட்டுக்கோபுர வீதி
( வெலிங்டன் சந்தி )
யாழ்ப்பாணம் [சி/4479]


மலர் தயாரிப்பு
க. பரமலிங்கம்

59, புனித பத்திரிசியார்வீதி, யாழ்ப்பாணம்.

ஜி. ஆர். இராசசிங்கம் கௌரவபொதுசெயலாளர்

லாம். இக்காலப் பகுதியில் லீக் மனையென வளர்ச்சி கண் டமை யாவராலும் அறியப் பட்டது. வெளிமாவட்ட

புரிந்த வைத்தியக் கலாநிதி ஜே பி. சி. பிலிப்ஸ் அவர்க ளுக்கு, அவர் பணியாற்றிய நிறுவனங்கள் அனைத்தும்

வைத்தியக்கலாநிதி குடும் பத்தாருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது )

மலர் தயாரிப்பு

த, பரமலிங்கம்


## வரி விளம்பரம்

### இரசாயன நூல்

ஆசிரியர் - சத்தீஸ், பௌதிக இரசாயனம் பகுதி I நூல் வெளிவந்து விட்டது. 108, பிறவுண்றோட், யாழ்ப்பாணம். [2611[

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-04-92 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட சழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். [சி/4770]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். B0nd Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2607)

### தவறிவிட்டது

27.05.92 தி. சுதாகரன் [ஜெயா பென்சி ஹவுஸ், 160 நவீன சந்தை யாழ்ப்பாணம்] என்பவரது அடையாள அட்டை பிரயாண அனுமதிச் சீட்டு அடங்கிய பை ஒன்று பரந்தன்- கண்டாவளைக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [2608]


# நினைவு கூருகின்றோம்...

# 1992-05-30

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு - கிரான்குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**குமார்** (நடராசா கிருஸ்ணகுமார் - இருதயபுரம், மட்டக்களப்பு)

**வசந்** (இராசேந்திரன் அருளானந்தராசா - அமிர்தாழி, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப் வாசன்** (நடராசா சிறிகாந் -சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார்)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 5ஆவது நாளாக மேற்கொண்ட 'ஒப்ரேசன் லிபரேசன்' நடவடிக்கையின் போது, தொண்டமனாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவெய்திய -

**கஜன்** (ரவி செல்வக்குமார் - மணலயகம்)

இதே நடவடிக்கையின் போது, உடுப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**வடிவு/லோகன்** (கனகசபை லோகேஸ்வரன் - பண்டத்தரிப்பு)

நாவற்குழி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**நிசாந்தன்** (நடராசா இரசகுலேந்திரன் - குமரபுரம், பரந்தன்)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

★ **மெய்** (க. மெய்யழகன் - தம்பலகமம், திருக்கோணமலை)

இதே ஆண்டு சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்றுவயதுக் குழந்தை.

1988 ஆம் ஆண்டு நிலாப்பொலவில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**விரலி/கரி** (வீரக்குட்டி பேரின்பநாதன் - மூதூர், திருக்கோணமலை)

1989 ஆம் ஆண்டு மாமுனையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய.

**கஜன்** (கனகசபை தர்மராசா - கரணவாய்தெற்கு, கரவெட்டி, யாழ்)

**தரன்** (குணரத்தினம் ஞானசேகரன் ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை)

**அசோக்** (கந்தசாமி ஜெயந்தன் வட்டுக்கோட்டை)

இதே சம்பவத்தின்போது, விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். முத்து** (சுந்தரலிங்கம் ஞானவேல் மானாங்கானை வல்வெட்டித்துறை)

நீர்வேலியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, சயனைட் உட்கொணடு வீரச்சாவெய்திய -

**சிவநேசன்** (சபாரட்ணம் சிவநேசன் நீர்வேலி)

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். நவம்** (தம்பையா தயாபரன் - கொக்குத்தொடுவாய், மணலாறு)

**மயூரன்** (சந்திரநாதன் - விசுவமடு முல்லைத்தீவு)

**கப்டன் பிரகாஷ்** (இலங்கேஸ்வரன் சங்கர் வவுனியா)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமுற்றிருந்து எமைப் பிரிந்த -

**மேஜர் சுருளி** (கந்தசாமி சிறீதரன் சுதுமலை வடக்கு மானிப்பாய்)

வவுனியாவில் - குடியிருப்புப் பகுதிகளிலிருந்து சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போன பல தமிழ் இளைஞர்கள் -

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4477)


## கூறுவிலை கோரல்

யாழ். காமாட்சி இரும்புத்தொழிலகம், நீர்வேலி வீட்டுப்பாவனைக்கான ஆயுதங்கள், தெளிகருவி உட்பட விவசாயத்துக்குத் தேவையான உபகரணங்கள் செய்வோரிடமிருந்து கூறுவிலை கோரும் விண்ணப்பங்களைக் கோருகின்றது. இதுபற்றிய மேலதிக விபரங்கள், விண்ணப்பப்படிவம் தேவைப்படுவோர் 05 - 06 - 92 க்கு முன்னர் கோண்டாவிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன யாழ் மாவட்ட செயலகத்துடன் அல்லது யாழ். மாவட்டத்திலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன பிரிவுச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொறுப்பாளர்

(சி/1419) தமிழீழ ஆய்வு நிறுவனம், யாழ் மாவட்டம்

## சிந்தனைக்கு

விழாமல் இருப்பதில் அல்ல, நம் தலையாய சிறப்பு விழுகின்ற ஒவ்வொரு முறையும் மீண்டும் மீண்டும் எழுகின்ற நிலைதான் நமக்குப் பெருமை.

-கன்ஃபூசியஸ்

ஈழநாதம்

#1, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 30-05-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 05

## உருக்குலைந்தாலும் உறுதி தளரா வல்வை

வடமராட்சியில் குறிப்பாக வல்வெட்டித்துறை மீது சிறிலங்காவின் முப்படைகளும் நேற்று முன்தினம் கண்மூடித்தனமான பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். எட்டுமாதப் பச்சிளங் குழந்தை ஒன்று உட்பட ஒன்பது பேர் அப்பகுதியில் கொல்லப்பட்டனர். இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள் உட்பட பெருந்தொகையான உடைமைகளும் சேதமடைந்தன.

சிறிலங்கா ஆயுதப் படையினர் மேற்கொண்ட இக் கண்மூடித்தனமான தாக்குதலில், விமானப் படைக்குச் சொந்தமான சுப்பர் சோனிக் ஜெட் விமானங்களும் பங்கு பற்றின. இவை வீசிய குண்டுகளே, பெருமளவு மக்கள் இறந்ததிற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளுக்கு எனக் கொள்வனவு செய்யப்பட்ட இவ் ஜெட் விமானங்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள் மேற்கொண்ட 'கன்னித்தாக்குதல்', வல்வெட்டித்துறையில், பொதுமக்களின் வீடுகள் மீது மேற்கொள்ளப்பட்டது என்பது சிறிலங்கா அரசாங்கத்தின் ஜெட் விமானக் கொள்வனவின் உண்மைத் தன்மையை வெளிக்காட்டியுள்ளது.

சிறிலங்கா விமானப் படையிடம் முன்னர் இருந்த சியாமாசு செட்டி குண்டுவீச்சு விமானங்களும், வை-8, வை - 12 விமானங்களும் வேகம் குறைந்தவை. விமானங்கள் வானவெளியில் வட்டமிடுவதைக் கொண்டே தாக்குதல் இலக்கை ஓரளவு தீர்மானித்துக் கொள்ளலாம். அத்தோடு, விமானங்கள் வந்து விட்டதும், பொதுமக்கள் பாதுகாப்பையும் ஓரளவு தேடிக்கொள்ளலாம்.

ஆனால், சுப்பசொனிக் ஜெட் விமானங்கள் ஒலியை விட வேகம் கூடியவை. ஆகையால், வானவெளியில், விமானத்தின் ஒலியைக்கேட்டு மக்கள் அடையாளம் காண்பதற்கு முன்னர் விமானம் தாக்குதலை நடத்திமுடித்துவிடும். இனப்படுகொலையையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவரும், சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு இது பெரும் வாய்ப்பும் ஆகும்

இதேவேளை, சிறிலங்கா இராணுவத்தினா நேற்று முன்தினம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையானது மட்டுப் படுத்தப் பட்டதாக பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பகுதியில் இருந்து தொண்டமனாறு போய்ச் சேருவதாக அதாவது, வலிகாமப் பகுதிக்குள் என நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், விமானப்படையின் பிரதான இலக்கே வடமராட்சியாக, குறிப்பாக வல்வெட்டித்துறையாகவே இருந்தது.

சிறிலங்கா இராணுவமாக இருந்தாலென்ன, இர்

# அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் இந்திய ராஜதந்திரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடை விதித்ததன் மூலம் இந்திய ராஜதந்திரம் கொழும்பு அரசியல் உலகில் மிகவும் சிக்கலான எதிர்விளைவுகளை உண்டுபண்ணியுள்ளது. இந்த ராஜதந்திர நடவடிக்கை ஏற்படுத்தியுள்ள சந்தேகங்களையும், அச்சங்களையும், ஆபத்துகளையும் எடுத்து விளக்குகிறது 'இந்து' பத்திரிகையில் வெளியாகிய இந்தக் கட்டுரை.

புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டதன் பின்னர், இலங்கையில் இந்திய இராஜதந்திரம் மிகவும் சிக்கல் வாய்ந்த நிலைமை ஒன்றை எதிர்நோக்குகின்றது. இலங்கையின் வடக்கு - கிழக்கில் சமாதானம் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைக் குலைப்பதாக கொழும்பினால் குற்றஞ் சாட்டப்படக் கூடிய ஒரு அபாயத்தை புதுடில்லி எதிர்நோக்குகின்றது.

வடக்கு - கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகள் தோல்வி அடையுமிடத்து அதற்கான பொறுப்பு இந்தியாவே என்று சாட்டுக் காட்டப்படக் கூடிய சூழ்நிலையைத் தவிர்த்துக் கொள்வதை உறுதி செய்வதும் பிரேமதாசாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குப் பொறுப்பான 'வில்லன்' இந்தியாவே என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிக் கொள்வதை உறுதி செய்வதுமே இந்தியக் கொள்கையை இன்று எதிர்நோக்கும் பாரிய இராஜதந்திரச் சவால்களாகும்.

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக அவ்வியக்கத்துக்குச் சட்டபூர்வத் தன்மை ஒன்றை கொடுக்க வேண்டாம் என்ற தொனியில் இந்தியா சூசகமாகத் தெரிவிக்கும் கருத்துக்கள், சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்கும் பிரேமதாசா நிர்வாகத்தை உறுதி குலையச் செய்யவும்மேற் கொள்ளப்படும் முயற்சிகள் என்றே நோக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் காமினி திசநாயக்கா மற்றும் லலித் அத்துலத்முதலி தலைமையிலான அதிருப்தியாளர் குழுவுககும் இந்தியா ஆதரவு தருகின்றது என்று அரசாங்கத்திற்குள் இருக்கும் சில பிரிவினர் நம்புகிறார்கள் போலத் தெரிகிறது எதிரணிக்கு இந்தியா தருவதாகக் கூறப்படும் இந்த ஆதரவும். புலிகள் மீதான இந்தியாவின் தடையும் பிரேமதாசா அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான ஒரு சதித் திட்டத்தின் அங்கமாகவே நோக்கப்படுகின்றன.

### தெரிவுக்குழு விவகாரம்

புலிகள் மீதான தடையின் மூலமாக இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டை சீர்குலைக்க இந்தியா முயற்சிக்கின்றது என்பது பத்திரிகைகள் வாயிலாக கிளம்பும் இன்னொரு குற்றச்சாட்டாகும். கொழும்பு புலிகளைத் தடை செய்யாது: ஏனென்றால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டை இது பாதிப்பதை அரசு விரும்பவில்லை என்று அரசாங்க வட்டாரம் ஒன்று அரசாங்கப் பத்திரிகையில் கூறியிருக்கிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்பாக புலிகள் தோன்ற வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது: புலிகளைத் தடைசெய்தால், அதை சாட்டாக வைத்தே புலிகள் தெரிவுக்குழு முன் வராமல் விடுவர் என்று பெயர் குறிப்பிடாத அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டில் புலிகள் சம்பந்தப்படாததற்கும் இந்தியா புலிகள் மீது விதித்த தடைக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பது தெளிவானதாகும் அரசாங்கம் அதன் யோசனைகளை முதலில் முன் வைக்காதவரை தாங்களும் எந்தவொரு யோசனைத் திட்டத்தையும் தெரிவுக் குழு முன் வைக்கப் போவதில்லை என்று புலிகள் அறிவித்து விட்டார்கள்.

இலங்கை அரசாங்கம் எந்தவொரு யோசனையையும் தெரிவுக்குழுவுக்கு முன்வைக்கவில்லை. இதற்குக் காரணம் எதிர்க்கட்சியின் அரசியல் தாக்குதலுக்கு இலக்காகும் அபாயம் உண்டு என அரசு உணர்வதே. எவ்வாறெனினும், தெரிவுக்குழுவின் செயற்பாடுகளில் புலிகளை சம்பந்தப்படுத்த முடியாமல் இருப்பதற்கு ஒரு ''பலிக்கடா'' வாக இந்தியாவை காட்டக் கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

### வசதியான இலக்கு

இலங்கை அரசாங்கத்தினால் எதிர்நோக்கப்படும் இரண்டு பாரிய சவால்களுக்கான குற்றத்தைச் சுமத்துவதற்கான ''வசதியான இலக்காக'' இந்தியா மாறக் கூடிய சூழ்நிலை ஒன்று இருக்கிறது. வடக்கு - கிழக்கு நெருக்கடியை அரசியல் ரீதியாகவோ அன்றி இராணுவ ரீதியாகவோ தீர்த்து வைப்பதில் எதிர்நோக்கப்படும் அதிகரித்த சிக்கலும் எதிர்க்கட்சியினர் மற்றும் அதிருப்தியாளர்கள் மத்தியில் அதிகரிக்கும் நம்பிக்கையும் அரசாங்கத்தை வெகுவாகப் பாதிக்கிறது.

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் இந்தியா சிக்குப்படுவது எவ்வளவு இலகு என்

த

பதைக் கடந்த ஒரு தசாப்தகால அனுபவம் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு சிக்குப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் தவிர்க்க முடியாமல் இந்தியா அதன் 'விரலைச் சுட்டுக் கொண்டது' என்பது அனுபவத்தின் மூலம் தெரிகிறது.

இலங்கையில் சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் ஒரு நாடாக இந்தியாவைக் காட்டுவது ஒப்பீட்டளவில் வெகு இலகுவான ஒன்றாகும்.

ஏனென்றால், அண்மைக் காலமாகப் புலிகளுடனான பேச்சு விடயத்தில் இந்தியா காட்டிய சமிக்ஞை சகலதுமே எதிர்மறையானதாக இருந்ததே. சமாதான முயற்சிகள் தொடர்ந்து நகர்வதற்குச் செய்யக் கூடிய காரியங்கள் குறித்து எந்தவொரு நேர்மறையான அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டதாகவும் இல்லை. தீர்வுக்கான சமாதான முயற்சிகளை இன்னமும் புதுடில்லி ஆதரிப்பதாகத் தெரிவிப்பதன் வாயிலாக மேற்கூறப்பட்ட எதிர்மறையான சமிக்ஞைகளைச் சமப்படுத்த முடியும் என்று சில அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றார்கள், எனினும், கடந்த ஒரு தசாப்தகாலமாக இந்திய இலங்கை உறவுகளில் ஒரு பிரத்தியேகமான நிலையான அம்சம் ஒன்றை மற்றது சந்தேகக் கண்ணோடு பார்த்ததே என்பதை வேறு சில அவதானிகள் நினைவுபடுத்தத் தவறவில்லை.

இந்தியாவின் தரப்பில் மேற்கொள்ளப்படக் கூடிய எந்தவொரு சமாதான முன்முயற்சியும் மீண்டும் இலங்கையின் உள்விவகாரத்திலான தலையீடாகவே நோக்கப்படுவது சாத்தியம்.

நன்றி:- 'இந்து'

# அமெரிக்க - இந்திய கூட்டுப் பயிற்சி கொச்சிகரைக்கு அப்பால் ஆரம்பம்

(டில்லி)

கேரளமாநிலத்தின்கொச்சி துறைமுகத்திற்கு அப்பால் அரபுக் கடல் பகுதியில் இருபத்திநான்கு மணிநேரம் நீடிக்கும் கூட்டு கடற்படைப் பயிற்சியை இந்தியாவும் அமெரிக்காவும் நேற்று முன்தினம் பிற்பகலில் ஆரம்பித்தன

இந்தியாவிலிருந்து இரண்டும் அமெரிக்காவிலிருந்து இரண்டுமாக மொத்தம் நான்கு போர்க்கப்பல்கள் இந்தப்பயிற்சியில் பங்கு பற்றுகின்றன ஐ. எம். எஸ். றஞ்சித் ஐ எம்.எஸ் கோமதி என்னும் இரண்டு இந்தியக்கப்பல்களும் அமெரிக்காவின் ஏழாவது கடற்படை அணியைச் சேர்ந்த யு எஸ் எஸ் டேவிட் ஆர் றே யு எஸ் எஸ். வான்டிக்ஸ் என்னும் இரண்டு கப்பல்களும் இந்தக் கூட்டுப்பயிற்சியில் பங்குபற்றின.

இப் பயிற்சி நடவடிக்கைகள் இலகுவானதாகவே இருக்கும் என்று புதுடில்லியில் அரசாங்க

## பர்கூர் காடுகளில் வீரப்பன் பதுங்கியிருப்பதாக தகவல்

- தமிழக பொலிசார் அறிவிப்பு

# கங்கைநீர்ப் பங்கீடு குறித்து திட்டம் தயாரிக்கப்படும்

## இந்தியா - பங்களாதேஷ் இணக்கம்

(டில்லி)

கங்கை நதிநீரை தமக்கிடையே பங்கிட்டுக்கொள்ள நிரந்தர திட்டமொன்றைத் தயாரிக்க இந்தியாவும் பங்களாதேஷ் என்பன இணங்கியுள்ளன. இது கடந்த 20 வருடங்களாக இரண்டு நாடுகளுக்கிடையில் உள்ள முக்கிய பிரச்சினையாக இருந்து வந்துள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதாஷியா யின்போது இம் முடிவு எடுக்கப்பட்டது

சட்டவிரோதமாக எல்லையைக் கடந்து இந்தியாவிற்குள் வருவோர் விவகாரம் இப் பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக ஆராயப்பட்டது.

இவற்றைக் கட்டுப்படுத்த இருநாடுகளினதும் மூத்த ராஜதந்திரிகள் மட்டத்திலான குழுவொன்றை அமைப்பதெனவும் இணக்கம் காணப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

என நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், விமானப்படையின் பிரதான இலக்கே வடமராட்சியாக, குறிப்பாக வல்வெட்டித்துறையாகவே இருந்தது.

சிறிலங்கா இராணுவமாக இருந்தாலென்ன, இந்திய இராணுவமாக இருந்தாலென்ன வல்வெட்டித்துறை என்பது அவர்களுக்கு ஓர் அச்சமூட்டும் இடமாகவே இருந்துவருகிறது புலிகளின் தலைமைத்துவத்தை எவ்வாறு தமது ஆதிக்க விஸ்தரிப்பிற்கு முட்டுக்கட்டையாகக் கருதுகின்றார்களோ அதேபோன்று வல்வெட்டித்துறை என்பதையும் ஓர் அச்சுறுத்தலாகவே அவர்கள் கருதுகின்றார்கள். ஆனால் தலைவர் பிரபாகரன் மீதுள்ள கோபத்தை அவர்களால் எப்பொழுதும் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் வல்வெட்டித்துறை மீதுள்ள தமது வஞ்சத்தை கடலிலிருந்தும் வானத்திலிருந்தும் இடைக்கிடை தரைமூலமாகவும் தீர்த்துக்கொள்கின்றனர்.

வல்வெட்டித்துறையானது காலத்திற்குக் காலம் ஓர் படுகொலைக் களமாகவும் அழிவிற்குட்படும் பூமியுமாகவே இருந்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் போர் ஆயுதப் போராட்டமாக கூர்மையடைந்த பின்னர் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பு முதல் முதலில் வல்வெட்டித்துறையிலேயே இடம் பெற்றது சுமார் 700 பேர்வரையில் கைதிகளாக கொண்டு செல்லப்பட்டனர் முதல் முதலில் பூஸா முகாமிற்கு அனுப்பபட்டவர்களும் இவர்களே. இதன் பின்னர் 1987 இல் ''ஒப்பரேசன் லிபரேசன்'' போது சிறிலங்கா இராணுவம் வல்வெட்டித்துறையை ஒரு மயான பூமியாககியது. இதேவேளை 'ஒப்பரேசன் லிபரேசனை' சாட்டாக வைத்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கால் வைத்த இந்திய இராணுவமும் வல்வெட்டித்துறையில் ஒரு படுகொலையை நிகழ்த்தத்தவறவில்லை. சுமார் 79 பேர் இந்திய இராணுவத்தால் ஒரே நாளில்படு கொலை செய்யப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் கட்ட ஈழப்போரிலும் வல்வெட்டித்துறை சிறிலங்கா ஆயுதப்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு உள்ளாகியது. 1991 ஆம் ஆண்டில் மூன்று தினங்கள் நடந்த கோரக் குண்டுவீச்சால், வல்வெட்டித்துறை என்றுமில்லாதவாறு பாரிய அழிவிற்கு உள்ளாகியது. சிறிலங்கா அரசாங்கம் புலிகள் மீதுள்ள வஞ்சத்தை வல்வெட்டித்துறையிலேயே தீர்த்துக் கொண்டது எனலாம். இறுதியாக நேற்று முன் தினம், சிறிலங்காவிமானப்படை தனது ஆத்திரத்தை வல்வெட்டித்துறை மீது தீர்த்துக் கொண்டது.

இவ்வாறாக வல்வெட்டித்துறையை அழித்துவிட வேண்டும் என்று சிறிலங்கா இராணுவமும், அரசாங்கமும் மேற்கொள்ளும் நடவடிக்கையானது ஓர் திட்டமிட்ட செயல் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனையும், தமிழீழம் போற்றும் மாவீரர்கள் பலரையும் ஈன்றெடுத்த வல்வெட்டித்துறை மீது மேற்கொள்ளப்படும் இக்கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கையானது, கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடேயாகும்.

## பதுங்கியிருப்பதாக தகவல் - தமிழக பொலிசார் அறிவிப்பு

(சென்னை)

சந்தன மரம் கடத்துவதில் பிரபல்யம் பெற்றதாக சொல்லப்படுபவரும், அரச அதிகாரிகளைப் பழிவாங்கும் நோக்குடன் கொலை செய்தவர் எனக் கருதப்படுபவருமான வீரப்பன் தற்போது பெரியார் மாவட்டம் பர்கூர் பகுதியிலுள்ள காடுகளில் தனது சகாக்களுடன் தங்கியிருப்பதாக தமிழகப் பொலிசார் கூறியுள்ளனர். இந்தப் பகுதியில் காவல்துறை நிலையங்களைப் போல் வனக் காவலர் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும், தற்போது வனக் காவலர் ஒரு நிலையத்திற்கு இருவர் என்ற ரீதியில் ஆயுதங்கள் எதுவுமற்றவராக இருப்பதால், வீரப்பனைக் கண்டாலும் கைது செய்வது சிரமம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இக்காட்டுப் பகுதியை நவீன ஆயுதங்கள் தாங்கிய காவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கவிதைத் தொகுப்பு நூல் தமிழகத்தில் வெளிவந்தது

கவிஞரும், சினிமா நடிகருமான சிலோன் விஜயேந்திரன் எம்.ஏ ஈழத்துக் கவிதைத் தொகுப்பு எனும் நூலைத்தமிழகத்தில் வெளியிட்டுள்ளார்.

356 பக்கங்கள் கொண்ட இந்நூலை சென்னையின் பிரபல வெளியீட்டகமான பாரி நிலையம் வெளியிட்டுள்ளது.

ஈழத்துக் கவிஞர்களான புலவர் ம. பார்வதிநாதசிவம், மாவிட்டபுரம் பண்டிதர் க. சச்சிதானந்தன் உட்பட பன்னிரண்டு கவிஞர்களின் 127 கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

## உலக சனத்தொகை 5.48 பில்லியனை அடையும்

உலக சனத்தொகை அடுத்தமாத இறுதியில் 5. 48 பில்லியனை அடையும் என ஐக்கிய நாடுகள் சனத்தொகை மதிப்பிடும் நிறுவனம் அறிவித்துள்ளது. இது 1998 இல் ஆறு பில்லியனை அடையும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வருடாந்த சனத்தொகை அதிகரிப்பு சராசரியாக 97 மில்லியனாக இருக்கும் எனவும் இவ் அதிகரிப்பின் அரைவாசிக்குமேல் ஆபிரிக்கா, தென்னாசியாவிலேயே இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2050ஆம் ஆண்டில் 10பில்லியனை எட்டிப்பிடிக்கும் உலக சனத்தொகை 2150 ஆம் ஆண்டில் தற்போதுள்ள சனத்தொகையைப்போல் இருமடங்காகும் (அதாவது 11.6 பில்லியன்) எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பயிற்சி நடவடிக்கைகள் இலகுவானதாகவே இருக்கும் என்று புதுடில்லியில் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதாஷியாவிற்கும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவிற்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை

குழுவொன்றை அமைப்பதெனவும் இணக்கம் காணப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

## அயோத்தியாவில் சுற்றுச் சுவர் எழுப்பியது பாதுகாப்பை பலப்படுத்தவே - உ. பி. முதல்வர்

(டில்லி)

அயோத்தியாவில்சர்ச்சைக்கு உட்பட்ட பகுதியைச் சுற்றி சுவரெழுப்பியது இந்தப் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் என்று உத்தரப் பிரதேச முதல்வர் கல்யாண்சிங் கூறியுள்ளார். இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சருக்கு அவர் எழுதிய கடிதமொன்றில் மேலும் கூறுகையில் பாதுகாப்புச் சுவர் எழுப்பப்பட்டதையடுத்து முட்கம்பி வேலிகள் அகற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்து உள்ளார். சுப்றீம் கோர்ட்டின் இடைக்கால உத்தரவு மீறப்படுவதாக தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து கருத்து தெரிவிக்கையில் தாவாவிற்குஉட்பட்டவளாகத்தில் நீதிமன்ற ஆணையை மீறும் வகையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது எனக்குறிப்பிட்டார்.

## இந்தியாவிலிருந்து தமிழகத்தைப் பிரிக்க சதி 9 பேர் மீது குற்றச்சாட்டு

தமிழகத்தை இந்தியாவிலிருந்து பிரித்துத் தனிநாடாக்குவதற்கான சதி வேலையில் ஈடுபட்டதாக ஒன்பது பேர் குற்றவாளிகளாகப்பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டிருக்கும் பொட்டம்மான் இப்போதும் இந்தச் சதியில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளார். ராஜீவ் காந்தி கொலைவழக்கை விசாரிக்கும் நீதிபதி இதுபற்றிய பிரகடனத்தைநேற்றுவெளியிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒன்பது பேரும் இப்போது தலைமறைவாக இருப்பதால் குற்றவாளிகளாகப்பிரகடனப் படுத்தப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஆறு பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பொட்டம்மான்உட்படமூன்று பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

ஜூன் மாதம் 22 ஆம் திகதி காலை 10. 30 மணிக்கு இவர்கள் தனி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி நீதிபதி சித்திக் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஏற்கனவே சதிக்குற்றச்சாட்டின் பேரில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்

## இந்தியா - பங்களாதேஷ் கூட்டு அலுவல்கள் குழு

இந்தியாவும்பங்களாதேஷும், அல்பா தீவிரவாதிகள் மற்றும் சக்மா பழங்குடியினர், சட்ட விரோதமாக குடியேறியோர் பற்றிய பிரச்சினைகளையும் சமாளிக்க கூட்டு அலுவல் குழுவொன்றை அமைப்பதென முடிவு செய்துள்ளன. இரு நாடுகளினதும் உள்துறை அமைச்சர்கள் தலைமையேற்கும் இந்தக் கூட்டு அலுவல் குழுவில் உயரதிகாரிகளும் இடம் பெறவுள்ளனர்.

## இருதரப்பு உடன்படிக்கை சுவீடனில் கைச்சாத்து

இந்தியாவும் சுவீடனும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டுள்ளன. நேற்று முன்தினம் ஸ்டாக்ஹோமில் தொழில்துறை இணை அமைச்சர் பேராசிரியர் பி. ஜே குரியனும், சுவீடனின் வெளிவாணிப அமைச்சர் டிங்கல்ஸ்பினும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

## படைப்புக்கள் பிரசுரமாகும்

நேதாஜி சுபாஸ் சந்திரபோசின் இலக்கியப் படைப்புக்களைப் பிரசுரிக்க வேண்டுமென்றும், மேற்கு வங்காள சட்டப்பேரவைக் கட்சிகள் கொண்டுவந்த கோரிக்கையை நேற்றுமுன்தினம்முதல்தடவையாக ஆளும் இடது சாரிமுன்னணி அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்த முடிவை வரவேறும் உள்ளனர்.

ஈழநாதம்

# இந்திய நெடுந்தூர ஏவுகணை வெற்றிகரமாக செலுத்தப்பட்டது

[புதுடில்லி]
இந்தியாவின் நெடுந்தூர தரைவிட்டு தரைபாயும் ஏவுகணை 'அக்கினி' நேற்று இரண்டாவது தடவையாக வெற்றிகரமாக ஏவப்பட்டது. இதன் மூலம் இவ்வகை ஏவுகணைகளை வைத்திருக்கும் ஆறாவது நாடாக இந்தியா வருகிறது.

இந்த இருகட்ட ராக்கெட் ஏவுகணை நேற்றுக் காலை ஒரிசா மாநிலத்திலுள்ள சந்திபூர் தளத்திலிருந்து ஏவப்பட்டது.

21 மீற்றர் நீளமும் 16 தொன் நிறையும் கொண்ட இவ் ஏவுகணை 1000 கிலோ நிறையை எடுத்துச் செல்லக் கூடியது.

பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார், ஒரிசா முதல்வர் பிஜூ பட்நாயக் மற்றும் முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு ஆலோசகர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ மீற்றர் தூரம் பாயக் கூடியதும் தரையிலிருந்து தரைக்கு ஏவக்கூடியதுமான இந்தப் பலஸ்டிக் ஏவுகணை அக்கினி எனப்பெயரிடப்பட்டுள்ளது. இதே இடத்திலிருந்துதான் 1989ம் ஆண்டில் 'அக்கினி' ஏவுகணையின் முதலாவது பரிசோதனை நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பரிசோதனைக்காக மூன்றரைக்கிலோ மீற்றர் சுற்றளவிலுள்ள சுமார் பதினொரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

இம்முறை அக்கினி ஏவுகணைப் பரிசோதனையின் முதல் கட்டத்தில் திண்ம எரிபொருளும், அடுத்த கட்டத்தில் திரவ எரிபொருளும் பயன்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## பொதுமக்கள்

இலக்கங்கள் நாளை வெளிவரும். 26/0815, 26/4533, 26/9554, 26/9956, 27/2588, 28/8871, 40/3700, 41/7401, 30/3806 (ச)

## செல்வநாயகம் நினைவு பேருரை

(யாழ்ப்பாணம்)
பேராசிரியர் சோ. செல்வநாயகம் எட்டாவது நினைவுப் பேருரை வரும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

புவியியற் துறைத் தலைவர் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், பேராசிரியர் கா. சிவத்தம்பி யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் என்னும் பொருள் பற்றி நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

# காவலிலுள்ள மீனவரை விடுவிக்க கூட்டுப்படை தலைமையகம் மறுப்பு

(நமது நிருபர்)
கடற்பரப்பில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரி கிறிஸ்தவ மத குருமார் விடுத்த வேண்டுகோளை கூட்டுப்படைத் தலைமையகம் நிராகரித்துள்ளது.

கடந்தவருடம் காங்கேசன்துறைக் கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற கிறிஸ்ரீந்தர் அரியரட்ணம், பிறங்கோ பிள்ளை கிறிஸ்ரோப்பர், பிரான்சிஸ் நிக்கலஸ் அந்தோனிப்பிள்ளை மனோகரன், குழந்தைவேல் குணசேகரன் ஆகியோரை விடுதலை செய்யுமாறுகோரி கிறிஸ்தவ மத குரு ஒருவர் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு வேண்டுகோள் ஒன்றையாழ். ஆசாரிய அதிபர் திரு க. மணிவாசகரூடாக விடுத்திருந்தார்.

இக்கோரிக்கையை நிராகரித்த கூட்டுப்படை தலைமையகம் இவர்களை விடுதலை செய்யும்படி விடுத்த கோரிக்கையை தாம் மறுபரிசிலனை செய்வதாக அறிவித்துள்ளது. [ச]

## புலிகளுக்கு எதிரான தடை மறுபரிசீலனை செய்க - மணியரசன்

(சென்னை)
விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை மத்திய அரசு மறுபரிசீலனை செய்து நீக்கவேண்டும் என்று தமிழ் தேசியபொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலர் கே மணியரசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## க. பொ. த (உயர்தர) மனைப் பொருளியல் பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)
க. பொ. த உயர்தர மனைப் பொருளியல் செய்முறைப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

நேற்று யாழ் திரும்பிய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவற்றை நேரடியாக எடுத்து வந்திருந்தார்.

மேற்படி பெறுபேறுகள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நேரடியாகவும் பாடசாலைமூலம் தோற்றியோருக்கு அந்தந்தப் பாடசாலைகளுக்கும் நேற்றைய தினமே அனுப்பி வைக்கப்பட்டதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

## கணித, விஞ்ஞான ஆசிரியர் இன்று போட்டிப் பரீட்சை

(நமது நிருபர்)
யாழ். மாவட்டத்தில் இன்று திட்டமிட்டபடி கணித, விஞ்ஞான ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை நடைபெறும் என யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து இரண்டாயிரம் பேர் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான பரீட்சைகள் இங்கு எட்டு பரீட்சை நிலையங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது.

இன்று காலை 9 மணி முதல் 10 மணிவரை பொது அறிவுப் பரீட்சையும் 10 15 முதல் 11 15 மணிவரை பொது உளச்சார்புப் பரீட்சையும் நடைபெறவுள்ளது தெரிந்ததே. (ச)

## 57 கிலோ வெடிமருந்து பொலிசாரிடம் பிடிபட்டது

(கொழும்பு)
நீர்கொழும்பிலிருந்து புத்தளத்திற்கு கொண்டு செல்லப்பட இருந்த 57 கிலோ வெடி மருந்து சிறிலங்காபொலிசாரால் கைப்பற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வெடிமருந்து மூட்டையாக கட்டப்பட்டு சைக்கிளில் கொண்டு செல்லப் பட்டபோது கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வெடி மருந்துகளை ஒரு கிலோ 250 ரூபா வீதம் பட்டாசுத் தயாரிப்பாளர்களிடம் நீர்கொழும்பில் கொள்வனவு செய்ததாகவும் புத்தளத்தில் அதனைக் கிலோ 500 ரூபா வீதம் விற்க முடியும் எனவும் சைக்கிளோட்டி தெரிவித்ததாக சொல்லப்படுகிறது.

## சிறிலங்கா

[illegible] ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வவுனியா நகரப் பகுதியில் ஆயுதங்களுடன் திரிந்த புளொட் உறுப்பினர்களின் ஆயுதங்கள் அனைத்தையும் 28 ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு முன் ஒப்படைக்கும்படி இராணுவம் அறிவித்திருந்தது.

இதனையடுத்து புளொட் குழுவினர் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டனராம். இதனையடுத்து இராணுவத்திற்கும் புளொட் குழுவினருக்குமிடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட பதினொருவர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மூன்றாம் இடத்தைப் பெறும் கழகத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டி இன்று பிற்பகல் 3 30 மணிக்கு யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

## இடர்

தோருக்கு நேற்று வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றி பரிசீலனை செய்வதற்கான விசேட கூட்டமொன்றை இன்று காலை 9 30 மணிக்கு மேற்படி இணையத்தில் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப் பட்டது. (ச)

## விவசாயிகளுக்கு

கோரி விண்ணப்பித்து ஒருவருடத்தின் பின்பு கூட முதல் இதற்கான அங்கீகாரத்தை சமூகசேவைகள் பணிப்பாளர் வழங்கியுள்ளார்.

மேற்படி தொகை நஷ்டஈட்டை ஒரு வாரத்தில் வழங்குவதாக பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். (ச)

## புலமைப்பரிசில்

இந்த ஆண்டுக்கான ஆண்டு 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ் கல்வித் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளன.

மேற்படி விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் (ச)

## ஓய்வூதியம

வவுச்சர்களும் ஏற்றப்பட்டதாகத் தெரிவித்த அவர் அடுத்த மாதம் நான்காம் திகதியளவில் இவை விநியோகிக்கப்படும் எனவும் கூறினார்.

## தெரிவுக்குழு

எனினும் இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை சுதந்திரக் கட்சி நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 9 வேங்கைகள்

ரன் சிவநேசன் அளவெட்டிப் பிள்ளையார் கோவில் வீதி, அளவெட்டி) வீரவேங்கை இலக்கியன் (சிவதாசப் பிள்ளை புஷ்பானந்தன் கட்டுடை மானிப்பாய்) ஆகியோரே வீரச் சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர்.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள் யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

## 31-ம் நாள்நினைவஞ்சலி

31. 5. 1992



கந்தசாமி வசந்திராதேவி (லல்லி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்

தோற்றம்: மறைவு



## 41ஆம் நாள் நினைவஞ்சலியும்

## கந்தசாமி வசந்திராதேவி (லல்லி)

மலர்வு 1.5.1961 | உதிர்வு 1.5.1992

பாலறுகு வைத்துப்
பன்னீரால் குளிட்டாட்டி
கோலவிழிக் கண்ணுக்கு கோடிட்டு
குங்குமத்தில் பொட்டிட்டு
செவ்வைச் சிவப்பினிலே கூறையுடுத்தி
குறைவில்லா நகையணிந்து
பொன்னகையும் புன்னகையும் போட்டியிட
அல்லி மலரெனவே - ஒரு
லல்லி மகள் வரவுக்காய்
அம்மா நான் காத்திருந்தேன்
நீயோ -
கூறை உடுத்தி
குங்குமத்தில் பொட்டிட்டு
வாசமலர் நடுவே
வண்ணமுகம் மாறாமல்
கண்மூடித் தூங்கும்
காட்சியைக் காணவா
பல்லாண்டாய் - நான்
பலவாறு விழித்திருந்தேன்

பிரிவால் துயரும்

அம்மா
மருமகன் (மோகன்)
சகோதரர்கள்
பிறேம்குமார் (ரஞ்சன்) ஜெர்மனி
சிவகுமார் (குமார்) ,,
வத்சலாதேவி (கிரி) ,,
நரேஸ்குமார் (ராதா)
சசிகலாதேவி (சசி)
மாமன்மார், மாமிமார்
சித்தப்பாமார், சித்திமார்
மச்சான்மார், மச்சாள்மார்
உறவினர், நண்பர்கள்

31-5-92 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

359/3, கோபால் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [2613]

---



தோற்றம்: 01 — 01 — 1902 | மறைவு 30 — 04 — 1992

## திருமதி கந்தையா மனோன்மணி

பாசத்தின் உறைவிடமாய்
இல்லத்தின் மாதரசியாய்
தேசத்தின் வழிகாட்டியாய்
எம்மிதயங்களில் குடி கொண்டாய்
மாதமொன்று கழிந்ததம்மா
உன் நினைவலைகள் நீங்கவில்லை
எம் இதயங்களில் என்றும் வாழ்கின்றாய் அம்மா

குறிப்பு:- அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் எமது இல்லத்தில் இன்று 30-05-1992 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு ஆரம்பித்து நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து அமுதருந்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

93/23, இந்து மகளிர் கல்லூரி
ஒழுங்கை,
சந்தரமடம்.

வே. க. ஏரம்பு
(ஓய்வு பெற்ற அதிபர்)
[/2615]

---


## ஷப்றா கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் வி.க நடத்தும்
கிரிக்கெட் ரோபிடித் தொடர்
இறுதியாட்டம்

## ஷப்றா அணி எதிர் ஜொனியன்ஸ் அணி

நாளை யாழ்.இந்து மைதானத்தில்!

(சி/4481)


---

...யோர் வீரச் சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

2 கவச... தினர் பலியாகியதுடன், 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஒன்பது போராளிகள் வீரச் சாவைத்தழுவிக்கொண்டனர்.

2..00 சேவையாளரிடம் கையளிக்கப்படவுள்ளன. உரியவர்கள் கிராமசேவகர்களிடமிருந்து இவற்றை பெற்றுக் கொள்ளலாம் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

### பலாலியில்

லிங்கர் சிடால் (19 ஆம் வட்டாரம்), மனுவல் அன்ரனி (குருநகர், யாழ்ப்பாணம்), சிதம்பரப்பிள்ளை நிமல்குமார் (வேதககோவிலடி, பருத்தித்துறை), நடராஜா ராஜ்குமார் (விஸ்வகுளம், பருத்தித்துறை), தேவசத்யன் அருணேசன் (கோவில் பெரியகுளம், வவுனியா), பரவசி வைத்திலிங்கம் (தமிழ்நாடு, இந்தியா) (ச)


### முல்லையில்

நேற்று பகல் 11.00 மணி வரை விடுதலைப் புலிகள் வழிமறித்து கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது இரண்டு இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டதோடு இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த இராணுவத்தினர் தற்பொழுது ஐந்தாம் கட்டை என்னும் இடத்தில் நிலைகொண்டுள்ளனர்.

போராளிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச் சாவை தழுவிக்கொண்டனர்.

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 15-6-28

மறைவு: 21-4-92

## செல்லையா பேரம்பலம்

எங்கள் குடும்ப விளக்கு அணைந்த பொழுது இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும், இன்னும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (30.5 92) சனிக்கிழமை அந்தியேட்டிக்கிரியை நடைபெறும். அஸ்தி திருவடி நிலையில் கரைக்கப்படும். நாளை (31.5 92) ஞாயிற்று கிழமை வீட்டுக் கிருத்தியம் எமது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து அன்னாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

52/2 வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(2616)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.